GOVERNMENTJOB.LK

# மத்திய மாகாண விவசாய திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழிநுட்பப் பிரிவு 03 (MT 1-2025 ) சேவைப் வகுதியில் (தொழிநுட்ப உதவியாளர் - விவசாய விரிவாக்கம்) தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2025

மத்திய மாகாண அரச சேவையில் விவசாய திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழிநுட்பப் பிரிவு 03 (MT 1-2025 ) சேவைப் வகுதியில் (தொழிநுட்ப உதவியாளர் - விவசாய விரிவாக்கம்) தரம் III பதவியிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமைகளையுடைய ஆண் / பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. **சம்பள அளவுத்திட்டம்** :

2025.03.25 ஆம் திகதிய பொது நிருவாக சுற்று நிரூபம் 10/2025 இன் MT 01- 2025 சம்பளத் தொகுதிற்கமைய இப்பதவிக்கான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா. 50,090 -10x540 -11x630- 10x1010- 10x1190 – ரூபா. 84,420/- ஆகும். அத்துடன் இச்சுற்று நிரூபத்தின் உப அட்டவணை III இற்கமைய நியமனம் செல்லுப்படியாகும் திகதியிலிருந்து சம்பளம் செலுத்தப்படும்.

03. **சேவை நிபந்தனைகள் :-**

3.1 இப்பதவியானது நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதும் ஆகும். தங்களுக்குறிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் தொடர்ந்தேச்சையாக எடுக்கப்படும் இக்கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும்.

3.2 இப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகைமைப் பெறும் அபேட்சகர்கள் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்பட்டு, இச்சேவைக்கு நியமிக்கப்படுவர்.

3.3 இப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்ததன் பின்னர் மத்திய மாகாண விவசாய திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழிநுட்பப் பிரிவு 03 (MT -1-2025 ) சேவைப் வகுதியில் (தொழிநுட்ப உதவியாளர் - விவசாய விரிவாக்கம்) பதவிக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டத்திற்கமைய உரிய வினைத்திறன்காண் தடைப் பரீட்சை மற்றும் அரசகரும மொழிக்கான தேர்வுப் பரீட்சைகளில் சித்தியடைதல் வேண்டும்.

3.4 இந்நியமனப் பதவியில் குறைந்தது 05 வருடங்கள் கட்டாயமாக மத்திய மாகாணத்தினுள் சேவையாற்ற வேண்டுவதுடன், அக்காலப்பகுதியில் மத்திய மாகாணத்திலிருந்து வேறு மாகாணங்களுக்கு இடமாற்றம் பெற்றுக்கொள்வது தொடர்பில் மேற்கொள்ளும் எத்தகைய கோரிக்கைகளும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. அத்துடன், நியமிக்கப்படும் சேவை நிலையத்தில் கடமைப் பொறுப்பேற்கும் திகதியிலிருந்து குறைந்தபட்சம் 03 வருட காலம் கட்டாயமாக சேவையாற்ற வேண்டும்.

3.5 இப்பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, மத்திய மாகாண நிதி ஒழுங்கு விதிகள், மத்திய மாகாண தொழிநுட்ப சேவைப் பிரமாணக் குறிப்பு, நடைமுறை விதி, மத்திய மாகாண கௌரவ. ஆளுநரினால் வெளியிடப்படும் விதிமுறைகள் அல்லது கட்டளைகள், மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் பிற விதிமுறைகள் அல்லது கட்டளைகள், அமைச்சு மற்றும் திணைக்களத்தினால் வெளியிடப்படும் அறிவுறுத்தல்கள் ஆகியவற்றிற்கு கட்டுப்பட்டு ஒழுகுதல் வேண்டும்.

04. **நிலவும் வெற்றிடங்கள் :-**

4.1 மத்திய மாகாண விவசாய திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழிநுட்பப் பிரிவு 03 (MT 1-2025 ) சேவைப் வகுதியில் (தொழிநுட்ப உதவியாளர் - விவசாய விரிவாக்கம்) தரம் III இல் நிலவும் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ள இருப்பதுடன், இப்பதவியில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவிற்குரியதாகும்.

GOVERNMENTJOB.LK

4.2 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2026.02.13 ஆகும். விண்ணப்பிக்கும் பதவிக்குறிய அனைத்து தகைமைகளையும் 2026.02.13 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னதாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

## 05. **தகைமைகள்**

5.1 கல்வித் தகைமைகள் : -

கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் மொழி அல்லது இலக்கியம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் உட்பட ஆறு (06) பாடங்களில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

5.2 தொழில்சார் தகைமைகள் :-

I. பொது நிருவாக சுற்று நிரூபம் 01/2012 இன் அடிப்படையில் உரிய தொழில் துறையுடன் தொடர்புடைய தேசிய தொழில் தேர்ச்சி மட்டம் (NVQ) 05 இற்கான பாடநெறிச் சான்றிதழ் ஒன்றினைப் பெற்றிருத்தல்

அல்லது

II. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் இத்தொழிநுட்ப தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமனானது என ஏற்றுக்கொள்ளப்படும் வேறு தகைமைகளைப் பெற்றிருத்தல்

5.3 அனுபவம் : ஏற்புடையதன்று

5.4 பௌதீக தகைமைகள்: -

ஒவ்வொரு பரீட்சார்த்தியும் மத்திய மாகாணத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றுவதற்கும் பதவியிலுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கும் ஏதுவான வகையில் உடல், உள ஆரோக்கியத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5.5 ஏனைய தகைமைகள் : -

I. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
II. சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
III. விண்ணப்பங்கள் கோரப்படும் கடைசித் திகதிக்கு (2026.02.13) உடன் முந்திய 03 வருடங்கள் தொடர்ச்சியாக மத்திய மாகாணத்தில் நிரந்தர வதிவுடையவராக இருத்தல் வேண்டும். (விண்ணப்பதாரர் மத்திய மாகாணத்தில் 03 வருடங்களுக்குக் கூடிய நிரந்தர வதிவினைக் கொண்ட வாழ்க்கைத் துணையினைக் கொண்டிருப்பின் அது பற்றிக் கவனத்திற் கொள்ளப்படும்)
IV. ஏதேனுமொரு சமயமொன்றின் துறவியாக உள்ள எந்தவொரு நபரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க தகைமையற்றவராவார்
V. விண்ணப்பதாரர் 2026.02.13 ஆம் திகதியன்று பதவியுடன் தொடர்புடைய அனைத்து தகைமைகள் மற்றும் வயதெல்லையினை எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருக்கும் பட்சத்தில் மாத்திரம், சேவையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக தகைமைகளைப் பெற்றுக்கொண்டார் என ஏற்றுக்கொள்ளப்படும்.

## 06. வயதெல்லை :

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியான 2026.02.13 இற்கு 18 வயதுக்கு குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

GOVERNMENTJOB.LK

07. பரீட்சைத் திட்டம்

I. இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.
II. பரீட்சார்த்திகள் பரீட்சையில் தோற்றும் அனைத்து வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும்.
III. பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும்.
IV. பரீட்சை நிலையம் - கண்டி நகரில் மாத்திரம் நடைபெறும்

08. ஆட்சேர்ப்பிக்கும் முறை

எழுத்து மூலப் பரீட்சை மற்றும் பொதுவான நேர்முகப் பரீட்சைகளின் பெறுபேறுகளுக்கமைய ஆட்சேர்ப்பு செய்யப்படும். எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைந்துள்ள விண்ணப்பதாரர்களின் மொத்த புள்ளிகளின் திறமையின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்ய எத்தனித்துள்ள எண்ணிக்கைக்கு சமனான எண்ணிக்கையான விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சையொன்றிற்கு உள்வாங்கப்பட்டு தகைமையுடையவர்கள் தெரிவு செய்யப்படுவர். திறமை ஒழுங்கு வரிசையின்படி வெற்றிடங்களை நிரப்பும் போது யாதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் மிகுதியாகவுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைவிட அதிகமான எண்ணிக்கையான பரீட்சார்த்திகள் சமமான புள்ளிகளைப் பெற்று தகைமைப் பெற்று இருப்பின் மற்றும் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கான தேவைப்பாடு அச்சந்தர்ப்பத்தில் நிலவுகின்றதெனில், அவ்வாறு சமமான புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகளில் இருந்து மேலதிகமாக தெரிவு செய்வது தொடர்பில் தீர்மானம் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ள முடியும். இதன்போது அரச சேவைகள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை இல. 01/2024 இன் இரண்டாவது பந்தியின் பகுதி 1 இன் ஏற்புகளுக்கமைய தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

09. பரீட்சை தொடர்பான பாடவிதானம்

| வினாத்தாள் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| உளச்சார்பு | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| துறைசார் தொழிநுட்பவியல் வினாத்தாள் | 01 மணித்தியாலங்கள் | 100 | 40% |

| வினாத்தாள் | பாடவிதானம் |
|---|---|
| உளச்சார்பு | இவ்வினாத்தாள் தர்க்க ரீதியியாகச் சிந்திக்கும் ஆற்றல், முறன்பாட்டுக்கான தீர்வு, தீர்மானம் எடுத்தல், தீர்ப்பளித்தல் போன்றவை தொடர்பான அறிவினை ஆராயும் நோக்கில் தயாரிக்கப்படும் கட்டமைப்பு வினாக்களைக் கொண்டதாகும். |
| துறைசார் தொழிநுட்பவியல் வினாத்தாள் | 1. இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் விவசாயத்துறையின் பங்களிப்பு<br>1.1. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்துறையின் பங்களிப்பு,<br>1.2. வேலைவாய்ப்பு<br>1.3. விவசாயத்துறையில் ஏற்றுமதி இறக்குமதியின் நிலை<br>2. இலங்கையின் காலநிலை வலயங்கள் தொடர்பான அறிவு<br>3. மண் மற்றும் தாவரப் போசணைகள்<br>3.1 மண்ணின் கட்டமைப்பு, இழையமைப்பு, மண்ணின் பௌதீக இரசாயண உவர்த்திறன், பயிர்செய்கையில் அதன் தாக்கம்<br>3.2 தாவரப் போசணை, தாவர/ மண் போசணை முகாமைத்துவம்<br>3.3 தாவர ஊட்டச்சத்து தொடர்பான விசேட அம்சங்கள் |

GOVERNMENTJOB.LK

| | |
|---|---|
| | 4. நெல் உற்பத்தி<br>4.1 மண்ணின் காலநிலைத் தேவைகள்<br>4.2 நெல் வர்க்கங்கள்<br>4.3 நிலத்தினை தயார்ப்படுத்தலும் நாற்றுமேடை முகாமைத்துவமும்<br>4.4 நோய், பீடைக் கட்டுப்பாடு<br>4.5 பசளைப் பிரயோகம்<br>4.6 நீர் முகாமைத்துவம்/ விளைச்சலை அதிகரிப்பதற்கான நவீன முறைமைகள்<br>4.7 அறுவடை மற்றும் அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பம்<br><br>5. ஏனைய களப் பயிர்கள் உற்பத்தி<br>5.1 பெரிய வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு, சோளம் மற்றும் ஏனைய பயிர்களின் வர்க்கங்கள்<br><br>6. மரக்கறி உற்பத்தி<br>6.1 மரக்கறிப் பயிர் நாற்று மேடை முகாமைத்துவம்<br>6.1.1 விவசாயத் திணைக்களத்தின் முக்கிய அவதானத்தை பெற்றுள்ள மரக்கறி வகைகளை அறிமுகப்படுத்தல் மற்றும் நடுகைச் செயற்பாடுகள், அறுவடை மற்றும் அறுவடைக்குப் பின்னரான நடவடிக்கைகள்<br><br>7. பழங்கள் உற்பத்தி<br>7.1 விவசாயத் திணைக்களத்தின் முக்கிய அவதானத்தைப் பெற்றுள்ள பழப்பயிர் வர்க்கங்களை அறிமுகப்படுத்தலும், பயிர்ச் செய்கையை மேற்கொள்ளலும்<br>7.2 அறுவடை மற்றும் அறுவடைக்குப் பின்னரான நடவடிக்கைகள்<br><br>8. பயிர்ப்பாதுகாப்பு<br>8.1 பயிர்களைத் தாக்கும் பிரதான நோய்கள் மற்றும் பீடைகளை அடையாளம் காணலும் முகாமைத்துவம் செய்தலும்<br>8.2 களைக்கட்டுப்பாடும், களைக்கட்டுப்பாட்டு முறைகளும்<br>8.3 பீடைக்கொல்லி பாவனையின் போது பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு முறைகள்<br><br>9. வடிகாலமைப்பும் அதன் முக்கியத்துவமும்<br><br>10. மண் இரசாயனம்<br>10.1 மண் பாதுகாப்பின் முக்கியத்துவமும், மண் பாதுகாப்பு முறைகளும்<br><br>11. நீர்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவம்<br>11.1 வெவ்வேறு பயிர்களுக்குப் பொருத்தமான நீர்ப்பாசன முறைகள் மற்றும் நீர் முகாமைத்துவம்<br>11.2 நுண் நீர்ப்பாசன முறைகள்<br><br>12. பண்ணை இயந்திரமயப்படுத்தல்<br>12.1 பண்ணை இயந்திரமயப்படுத்தலின் நன்மைகளும் தீமைகளும்<br>12.2 நிலப்பண்படுத்தலில் பயன்படுத்தப்படும் விவசாய இயந்திரங்கள்<br>12.3 நீர் வழங்கல் மற்றும் தாவரப்பாதுகாப்பிற்காக பயன்படுத்தப்படும் விவசாய இயந்திரங்கள்<br>12.4 விவசாய இயந்திரங்களை இயக்குதலும், பராமரித்தலும்<br><br>13. தேனீ வளர்ப்பு<br>13.1 பொருளாதார முக்கியத்துவம்<br>13.2 தேனீக் கூடுகளை ஸ்தாபித்தல் மற்றும் பராமரித்தல்<br>13.3 அறுவடை மற்றும் சந்தைப்படுத்தல் |

GOVERNMENTJOB.LK

| | |
|---|---|
| | 14. அலங்காரத்தாவர வளர்ப்பு மற்றும் நில அலங்காரம்<br>14.1 பொருளாதார முக்கியத்துவம்<br>14.2 நில அலங்கார முறைகள்<br>14.3 வெட்டுப் பூ உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல்<br><br>15. பாதுகாப்பு இல்லங்களில் பயிர்ச்செய்கை<br>15.1 முக்கியத்துவம்<br>15.2 திட்டமிடல்<br>15.3 பயிர்களைத் தெரிவு செய்தல்<br>15.4 பராமரித்தல் மற்றும் அறுவடை செய்தல்<br><br>16. கால்நடை வளர்ப்பு<br>17.1 கோழி வளர்ப்பு மற்றும் பால் மாடு வளர்ப்பும்<br>17.2 ஒருங்கிணைந்த பண்ணை முகாமைத்துவத்தின் கீழ் மேற்குறிப்பிட்ட கால்நடை வகைகளை பராமரித்தல்<br><br>17. விவசாய விரிவாக்கம்<br>17.1 விவசாய விரிவாக்க தந்திரோபாயங்கள் மற்றும் முறைமைகள்<br>17.2 விவசாய விரிவாக்கத்தில் தொடர்பாடல் முறைமைகள்<br><br>18. இழைய வளர்ப்பு<br>18.1 இழைய வளர்ப்பின் முக்கிய கோட்பாடுகள் மற்றும் வரலாறு தொடர்பான அறிவு<br>18.2 இழைய வளர்ப்பின் பிரயோகம், உதாரணங்கள்<br>18.3 இழைய வளர்ப்பின் அனுகூலங்களும் பிரதிகூலங்களும்<br><br>19. பயிர்ப் பாதுகாப்புச் சட்டம் தொடர்பான அறிவு<br>19.1 பயிர்ப் பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள் தொடர்பான அறிவு<br>19.2 பயிர்ப் பாதுகாப்பு முறைமைகள்<br><br>20. தாவரப் பாதுகாப்பு<br>20.1 தாவரப் பாதுகாப்பின் முக்கியத்துவம் (தாவரங்கள் / மரபணு பிளாஸ்மா)<br>20.2 தாவரப் பாதுகாப்பு முறைகள் (தாவரங்கள் / மரபணு பிளாஸ்மா)<br><br>21. உயிரியல் தொழில்நுட்பம்<br>21.1 DNA இன் முக்கியத்துவம்<br>21.2 மரபணு என்றால் என்ன? அதன் தொழிற்பாடுகள்<br>21.3 மரபணு பொறியியல் மூலோபாயங்களின் ஊடாக தாவரங்களை விருத்தி செய்வதற்கான வாய்ப்புகள்<br><br>22. விவசாய அபிவிருத்தி<br>தற்போதய விவசாய அபிவிருத்திக் கொள்கைகளும் அதன் முக்கியத்துவமும்; விவசாய அபிவிருத்திச் செயற்றிட்டங்கள்; விவசாய அபிவிருத்தியுடன் தொடர்புடைய ரேகை அமைச்சின் கீழ் வரும் விவசாய திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள்; மத்திய அரசாங்கத்தின் விவசாய திணைக்களத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளும் அவற்றின் கடமைகளும்; விவசாயத் துறையில் தற்போது எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளும் சவால்களும்; விவசாய அபிவிருத்தி நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிக்கும் வழிமுறைகள்; விவசாய அபிவிருத்தித் திட்டங்களின் அனுகூலங்களினதும் பிரதிகூலங்களினதும் தாக்கங்கள். |

GOVERNMENTJOB.LK

10. விண்ணப்பிக்கும் முறை:-

I. இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய A4 அளவு தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பங்களைத் தயாரித்து தமது சொந்தக் கையெழுத்தினாலேயே பூர்த்தி செய்தல் வேண்டும். இலக்கம் 01 முதல் 03 வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்திலும், இலக்கம் 04 முதல் 06 வரையிலான பந்திகள் இரண்டாம் பக்கத்திலும், இலக்கம் 07 முதல் 11 வரையிலான பந்திகள் மூன்றாம் பக்கத்திலும், ஏனையவை நான்காம் பக்கங்களிலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும். பரீட்சார்த்தியினால் முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பமானது பரீட்சை அறிவித்தலில் தரப்பட்ட மாதிரிக்கு ஒத்திருக்கின்றது என்பதை உறுதிப்படுத்துவது பரீட்சார்த்தியின் பொறுப்பாகும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையாத, உரிய திகதிக்கு முன்னதாக பரீட்சைக் கட்டணம் செலுத்தியிறாத, சரியாக பூர்த்தி செய்திறாத, முழுமையற்ற, மற்றும் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள அடிப்படைத் தகைமைளைப் பூர்த்தி செய்திறாத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் பூர்த்தி செய்யாமல் நிராகரிக்கப்படும் விண்ணப்பங்கள் தொடர்பிலான இழப்பினை விண்ணப்பதாரரே பொறுப்பேற்க வேண்டும். முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியொன்றை வைத்திருப்பது உசிதமானது.

II. விண்ணப்பப்படிவத்தைத் தயார் செய்து கொள்ளும்போது பரீட்சையின் பெயரினை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடல் வேண்டும்.

III. அனைத்து விண்ணப்பதாரர்களும் பரீட்சைக் கட்டணத்தினை மத்திய மாகாண சபைக்கு செலுத்துதல் வேண்டும். பரீட்சைக் கட்டணமான ரூபா 600/- இனை மத்திய மாகாண பிரதான செயலாளரின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இல் வரவுவைக்கும் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னதாக மத்திய மாகாணத்திலுள்ள யாதேனும் ஒரு **பிரதேச செயலாளர் காரியாலயத்தில்** பணமாக செலுத்தி பெறப்படும் நீல நிற பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய கூட்டினுள் கழறாதவாறு ஒட்டிவிட வேண்டும். வேறு வருமான தலைப்பிற்கு செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு மற்றும் மத்திய அரசாங்கத்திற்குரிய மஞ்சள் நிற பற்றுச்சீட்டை ஒட்டி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பற்றுச்சீட்டின்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணங்கள் எக்காரணம் கொண்டும் மீள செலுத்தப்படமாட்டாது என்பதுடன் வேறு பரீட்சைகளுக்காக மாற்றீடு செய்யப்படவும் மாட்டாது. அத்துடன் பரீட்சைக் கட்டணமாக முத்திரை மற்றும் காசுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. உங்களது விண்ணப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள பரீட்சை மொழி மூலம் எச்சந்தர்ப்பத்திலும் மாற்றம் செய்யப்படமாட்டாது.

IV. விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு அல்லது பொது நிருவாக சுற்று நிரூபம் 10/2025 இல் தரப்படுத்தலுக்கமைய மூன்றாம் நிலை அல்லது சிரேஷ்ட நிலை மட்டத்தில் அரச / மாகாண அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் அலுவலரொருவரினால் சான்றுப்படுத்தல் வேண்டும். தற்போதைய மாகாண அரச சேவையில் நிரந்தர பதவியிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது திணைக்களத் தலைவரினூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

GOVERNMENTJOB.LK

V. இவ்வறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்படும் விண்ணப்பங்கள் "**செயலாளர், மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, இல 244, கடுகஸ்தோட்டை வீதி, கண்டி**" என்ற முகவரிக்கு **2026.02.13** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் "**மத்திய மாகாண அரச சேவையில் விவசாய திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழிநுட்பப் பிரிவு - 03 (MT 1-2025 ) சேவைப் வகுதியில் (தொழிநுட்ப உதவியாளர் - விவசாய விரிவாக்கம்) தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்தல் –2025**" எனக் குறிப்பிடல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும், முழுமையுறாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தபாலில் தொலைந்த விண்ணப்பங்கள் சம்பந்தமாக இவ்வாணைக்குழு பொறுப்புக் கூற மாட்டாது. விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பதவி மற்றும் சேவை நிலையம், பரீட்சைத் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளுக்கும் பொருத்தமானதாக அமைவதுடன், விண்ணப்பத்தினை அனுப்பியதன் பின்னர் அது தொடர்பில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

VI. தபாலில் தொலைந்த மற்றும் தாமதமாக கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் மற்றும் ஆவணங்கள் தொடர்பான புகார்கள் குறித்து கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

VII. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றி அறியத்தரமாட்டாது

VIII. பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்பட்டமை தகவுத் திறமையை ஏற்றுக் கொண்டதென அமையாது. விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சையின் போது, அறிவுத்தலுக்கமைய தகைமைகளைப் பூர்த்தி செய்யவில்லை என அறியப்படும் சந்தர்ப்பத்தில், அவரது பரீட்சார்த்தியுரிமை இரத்து செய்யப்படும்.

IX. பரீட்சை நிலையம் தொடர்பில் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் செயலாளரினால் விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைமூலம் அறியத் தரப்படும். விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டை வழங்கியவுடன் அது தொடர்பில் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் www.psc.cp.gov.lk எனும் இணையத்தளத்தில் வெளியிடப்படும். அனுமதி அட்டையானது பரீட்சை நடைபெறுவதற்கு14 நாட்களுக்கு முன்னதாக விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள கையடக்க தொலைபேசிக்கு குறுஞ் செய்தி (SMS) மூலமாக அனுப்பி வைக்கப்படும்.

X. அறிவிப்பு வெளியாகி 04 அல்லது 05 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கவில்லையாயின், அது தொடர்பாக அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்க வேண்டும். தங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவத்தினதும் காசு செலுத்திய பற்றுச்சீட்டினதும் பிரதிகள், பதிவுத்தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டுடன் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், முகவரி என்பவற்றை சரியாக குறிப்பிட்டு மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் காரியாலயத்திற்கு அறிவித்தல் வேண்டும். (தொலைபேசி இல. 081 – 2213097)

11. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின்படி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னதாக பரீட்சைக் கட்டணத்தை செலுத்திஉரிய பற்றுச் சீட்டுடன் சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படும்.

GOVERNMENTJOB.LK

12. பரீட்சார்த்திகள் தமக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் மாத்திரம் பரீட்சைக்காகத் தோற்றுதல் வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சையினை நடாத்தல் தொடர்பில் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் விதந்துரைக்கப்பட்ட விதிகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும். அவ்விதிகளை மீறும் பட்சத்தில், மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் நேரிடும்.

13. **ஆள் அடையாளம்** : - இப்பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாங்கள் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர். இதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றினைச் சமர்பித்தல் வேண்டும்.

- ஆட்பதிவு ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தேசிய ஆள்அடையாள அட்டை
- செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்
- செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

அத்துடன் பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமான வகையில் தங்களது முகம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் உபகரணங்கள் ஏதும் பாவிக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கு ஏதுவாக இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அதேபோன்று ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காண முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

14. **பொய்யான தகவல்களுக்கான தண்டனை**

14.1 விண்ணப்பங்களை நிரப்புகையில் மிகவும் அவதானத்துடன் நிரப்புதல் வெண்டும். இப்பரீட்சைக்கு ஏற்புடைய ஒழுங்கு விதிகளின் படி எவரேனும் பரீட்சார்த்தியொருவர் தகைமையற்றவர் என தெரிய வருமாயின் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலேனும் அவரின் பரீட்சார்த்தியுரிமை இரத்துச் செய்யப்படலாம்.

14.2 பரீட்சார்த்தியொருவர் வேண்டுமென்றே பிழையான தகவலை சமர்ப்பித்துள்ளாரென அல்லது வேண்டுமென்று ஏதேனும் ஒரு விடயத்தை மூடிமறைத்துள்ளாரென பின்னர் தெரியவருகையில், அவருக்கு நியமனம் வழங்குவது தொடர்பில் கனவனத்திற் கொள்ளப்படமாட்டாது, அத்துடன் அவரது நியமனம் இரத்துச் செய்யப்படலாம் அல்லது அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

15. விண்ணப்பதாரர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் www.psc.cp.gov.lk என்ற உத்தியோகபூர்வ இணையத்தளத்தினூடாக அறிவிக்கப்படும்

16. இவ்வறிவித்தலில் குறிப்பிட்டுள்ள/ குறிப்பிடாத விடயங்கள் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம், இப்பரீட்சையை நிகழ்த்துதல், நிகழ்த்திய பின் தெரிவு செய்தல், தெரிவு செய்யாதிருத்தல், வெற்றிடங்களின் எண்ணிக்கை பற்றிய விளக்கமளித்தல், தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் என்பன மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவிற்குறியதாகும். மேலும், இந்த அறிவிப்பில் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயம் இருப்பின், அது குறித்து தெளிவுபடுத்துவது / முடிவெடுப்பது மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் பொறுப்பாகும்.

GOVERNMENTJOB.LK

17. இவ்வறிவித்தல் தொடர்பான மேலதிக விபரங்கள் மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவத்தினை மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் www.psc.cp.gov.lk எனும் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

18. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி அறிவித்தலுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள அறிவித்தலே மேலோங்குதல் வேண்டும்.

மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப் படி

கை/இ: சுஜானி ஆர் விஜேதுங்க,
செயலாளர் (பதில்)
மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு
மத்திய மாகாண சபை

2026 ஜனவரி மாதம் 26 ஆம் திகதி
மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு
இல. 244, கடுகஸ்தோட்டை வீதி,
கண்டி